JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-1- Witness
for Prosecution

CC No. 141/2024 Crime No. 484/2024 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW. 1 ஷாலினி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 06.07.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பவானி பழனிபுரத்தில் குடியிருந்து கொண்டு, தற்பொழுது தான் கல்லூரி படிப்பை முடித்துள்ளேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு நேரத்தில் எனது வீட்டின் அருகில் சண்டை நடைபெற்றது. நான் எனது வீட்டில் இருந்து அந்த சண்டையை பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த சண்டையை யார் யாருக்கு இடையே நடைபெற்றது என்றோ, யார் யாரை அடித்தார்கள் என்றோ எனக்கு தெரியாது. இந்த வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விபரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. **புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

எதிரி ராகுலுக்கும், எனக்கும் இடையே ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்றாலும், இந்நிலையில் கடந்த 25.08.2024–ம் தேதியன்று இரவு சுமார் 08.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த பொழுது, அங்கு வந்த ராகுல் வீட்டின் முன்பு நின்று கொண்டு சத்தம் போட்டதாகவும், அப்போது எனது அப்பா, தம்பி, அம்மா ஆகியோர்கள் வெளியே வந்து பார்த்தபோது ராகுல் கையில் அரிவாளை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது அவர் என்னை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், எனது குடும்பத்தையும் கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும், அப்போது ராகுலை எனது அப்பா தடுக்க சென்றபோது அவர் கையில்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 15:47:16 +0530

வைத்திருந்த அரிவாளை அங்கேயே போட்டுவிட்டு அருகில் இருந்த கல்லை எடுத்து எனது தம்பியின் முகத்தில் அடித்து விட்டதாகவும், ராகுலுடன் வந்த சரண் என்பவர் எனது தம்பியை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வரவே எதிரிகள் இருவரும் அங்கிருந்து சென்று விட்டதாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டதால், எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 15:47:21 +0530

Sd/- (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-2- Witness
for Prosecution

CC No. 141/2024 Crime No. 484/2024 Station Bhavani

| Name | PW. 2 ஹரி சபரி | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 06.07.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பவானி பழனிபுரத்தில் குடியிருந்து கொண்டு, டேட்டா என்ட்ரி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு நேரத்தில் எனது வீட்டின் அருகில் சண்டை நடைபெற்றது. நான் எனது வீட்டில் இருந்து அந்த சண்டையை பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த சண்டையை யார் யாருக்கு இடையே நடைபெற்றது என்றோ, யார் யாரை அடித்தார்கள் என்றோ எனக்கு தெரியாது. இந்த வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

எதிரி ராகுலுக்கும், எனது அக்கா ஷாலினிக்கும் இடையே ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்றாலும், இந்நிலையில் கடந்த 25.08.2024–ம் தேதியன்று இரவு சுமார் 08.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த பொழுது, அங்கு வந்த ராகுல் வீட்டின் முன்பு நின்று கொண்டு சத்தம் போட்டதாகவும், அப்போது எனது அக்கா, நான், அம்மா ஆகியோர்கள் வெளியே வந்து பார்த்தபோது ராகுல் கையில் அரிவாளை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது அவர் எனது அக்காவை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், எனது குடும்பத்தையும் கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும், அப்போது ராகுலை எனது அப்பா தடுக்க சென்றபோது, அவர் கையில் வைத்திருந்த அரிவாளை அங்கேயே போட்டுவிட்டு அருகில் இருந்த கல்லை எடுத்து எனது முகத்தில் அடித்து விட்டதாகவும், ராகுலுடன் வந்த சரண் என்பவர் என்னை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வரவே எதிரிகள் இருவரும் அங்கிருந்து சென்று விட்டதாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு,

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 15:47:29 +0530

தற்போது எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டதால் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மறு விசாரணை இல்லை

**மறுவிசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 15:47:34 +0530

Sd/- (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-3- Witness for Prosecution

CC No. 141/2024 Crime No. 484/2024 Station Bhavani

| | | |
|---|---|---|
| Name | PW. 3 திருகோபால் | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 06.07.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது பவானி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்த வழக்கில் ஆவணங்களின் அடிப்படையிலும், புலன் விசாரணை அதிகாரியுடன் பணி புரிந்தவர் என்ற முறையிலும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 25.08.2024 ஆம் தேதியன்று இரவு 22.00 மணிக்கு நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் வாழச்சாமி என்பவர் நிலைய அலுவலகத்தில் இருந்த பொழுது, பவானி அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பட்ட ஹரி சபரி என்பவரது ASSUALT OP இன்டிமேஷனை பெற்று மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்த பொழுது, மேற்படி ஹரி சபரி வெளி நோயாளியாக சிகிச்சை பெற்று முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பிய விபரம் தெரிய வந்தது. பின்னர் 26.08.2024 ஆம் தேதியன்று காலை 10.00 மணிக்கு மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய அலுவலில் இருந்த பொழுது, ஹரி சபரி என்பவரது அக்கா ஷாலினி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 484/ 2024, சட்ட பிரிவுகள் 296(B), 118(1) , 351(3) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **புகார் மனு அ.த.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை பெற்ற நிலைய உதவியாளர் குருநாதன் என்பவர் அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான நந்தகுமார் மற்றும் மணி ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. சம்பவ இடத்திலிருந்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைக்கு அடக்கமான கல் ஒன்றிணையும், அரிவாள் ஒன்றிணையும் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.6 ஆகவும், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து கல் அ.த.சா.பொ.1 ஆகவும் அருவாள் அ.த.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் ஷாலினி, ஹரி சபரி, ரத்தினம், நீலாம்பால் சுமதி நந்தகுமார் மணி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் படிவம் 91 மூலம் வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். **படிவம் 91 அ.த.சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 14.09.2024 ஆம் தேதியன்று சாட்சி ஹரிபிரசாத்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.06 15:47:40 +0530

என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் செந்தில்நாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றார். **விபத்து பதிவேற்றுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகள் இருவரும் மாண்பமை ஈரோடு மாவட்டம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று விட்டதால், அவர்களை கைது செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவியாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அத்துடன் அவர் தனது புலன் விசாரணையை முடித்து கடந்த 14.09.2024 ஆம் தேதியன்று எதிரிகள் இருவர் மீதும் சட்ட பிரிவுகள் 296(B), 118(1) , 351(3) BNS கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் இந்த குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.06 15:47:54 +0530

Sd/– (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**